**தலைப்பு 1 - சனாதிபதி செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 1 - சனாதிபதி செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 25 ஆம் திகதி செயலகத்தின் சனாதிபதி செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

சனாதிபதி செயலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,727.73 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 3,307.04 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 420.69 மில்லியன் அதாவது 11.29 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,194.22 | 2,115.99 | 78.23 | 3.57 |
| மூலதன | 1,533.51 | 1,191.05 | 342.46 | 22.33 |
| மொத்தம் | 3,727.73 | 3,307.04 | 420.69 | 11.29 |

## 2.2 வருமானக் கணக்கு

சனாதிபதி செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 10.02.11.00 ஆம் வருமானக் குறியீட்டிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 34,000 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 33,358 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 98.11 சதவீதமாக இருந்தது.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

சனாதிபதி செயலகத்திற்குரிய விடய இலக்கம் 00101 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 33.00 | 18.02 | 16.00 | 20.63 | 100 | 62.78 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

சனாதிபதி செயலகத்தின் கீழ்வரும் 06 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 471.08 மில்லியனாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0015/0001/000 | 0.19 |
| 6000/0000/00/0020/0009/000 | 61.67 |
| 6000/0000/00/0002/0113/000 | 1.11 |
| 6000/0000/00/0013/0073/000 | 400.92 |
| 6000/0000/00/0016/0060/000 | 7.10 |
| 6000/0000/00/0018/0072/000 | 0.09 |
| மொத்தம் | **471.08** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

சனாதிபதி செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக்

கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 மிகை நிதிஏற்பாடு ஒதுக்குதல்

12 செலவின விடயங்களுக்காக மிகையாக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு 23 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்டத்தின் தாமதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மாத்தளை பிரதேசத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த தெயட்ட கிருள(தேசத்திற்கு மகுடம்) கணக்காட்சிக்காக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடத்தின் முதலாவது கட்டத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 50 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 42.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தின் முதலாவது கட்டமாக இரண்டு மாடிகளின் வேலை நடவடிக்கைகள் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் இக்கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாது நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ‘‘லமா மித்துறு பாசல்‘‘ செயற்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 3.00 மில்லியன் நிதிஏற்பாடும், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 16.42 மில்லியன் நிதிஏற்பாடுமாக ரூபா 19.42 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2015 யூலை 02 ஆந் திகதிய CS/5/Child Friendly Schools/1-Vol iv ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் மூலம் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்யுமாறு நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவையில் ‘‘லமா மித்துறு பாசல்‘‘ செயற்திட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களை நியமித்தல் மற்றும் அவர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்தல் மாத்திரம் அவதானிக்கப்பட்டதுடன் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 183,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதும் அந்த முற்பணம் எந்தப் பணிக்காகவும் பயன்படுத்தப்படாது அந்த மொத்த முற்பணமும் காசாகத் தீர்க்கப்பட்டிருந்தது.

### 3.4 செயலாற்றல்

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் பாராளுமன்ற அவைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 61 | 44 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 16 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 318 | 240 | 78 |
| (iv) | ஆரம்ப நிலை | 619 | 245 | 374 |
| (v) | ஏனைய (அமைய / தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 478 | 326 | 152 |
| | மொத்தம் | **1,494** | **871** | **623** |